DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**CC.No. 2/2022**

**அ.சா.– 3**

| | |
|---|---|
| பெயர் : திரு. தருமன் | கிராமம்: |
| த/பெ. : திரு. சேகர் | தாலுக்கா : |
| வயது : | தொழில்: |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 4th day of September, 2024.

( எதிரிகள் ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் வைரன்காடு, பூசாரிப்பட்டி கிராமம், சேலம் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம், கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.–1 என்னுடைய தாயார். அ.சா.–2 என்னுடைய சகோதரர். ஆஜர் எதிரிகளை தெரியும். 1வது எதிரி என்னுடைய பெரியப்பா மகன். 2ம் எதிரி 1ம் எதிரியின் தங்கையின் கணவர். 04.04.2017ம் தேதி இரவு 7 மணியளவில் நான் வெளியே இருந்தபொழுது, என்னடைய அண்ணன் அ.சா.–2 அருவாளால் வெட்டப்பட்டு வீட்டில் கிடப்பதாக சொன்னார்கள். உடனடியாக நான் வீட்டிற்கு சென்று பார்த்தபொழுது ஊர் மக்கள் கூடியிருந்தார்கள். அ.சா.–2 அருவாளால் வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் வீட்டின் தாழ்வாரத்தில் நிலைகுலைந்து வீட்டின் ஓரமாக அமர்ந்திருந்தார். என்னுடைய தாயாரும் அருவாளால் வெட்டப்பட்டு கீழே படுத்துக்கிடந்தார். நான் ஆட்டோவிற்கு போன் செய்து ஆட்டோ வந்தவுடன் அவர்கள் இருவரையும் ஏற்றிக்கொண்டு, அருகில் உள்ள தீவட்டிப்பட்டி காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றேன்.

இருவரையும் விசாரித்து போலீசார் எழுதி வாங்கினார்கள். அதன்பிறகு இருவரையும் சிகிச்சைக்காக ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு நான் அழைத்து சென்று சேர்த்தேன். எங்களுக்கும் எதிரி குடும்பத்திற்கும் ஏற்கனவே காட்டு பிரச்சனை உள்ளது. அதனால் இறந்துபோன திருப்பதி என்பவர் மதுபோதையில் வந்து

எங்களை அவ்வப்பொழுது பேசுவார். சம்பவத்திற்கு 4 நாட்களுக்கு முன்பு இறந்துபோன திருப்பதி என்பவரும், 2வது எதிரியும் எங்கள் வீட்டிற்கு வந்து அசா.–2 –டம் சண்டை போட்டார்கள். திருப்பதியின் மனைவியிடம் அ.சா.–2 பேசிக்கொண்டிருப்பதாகவும், அதனால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று தகராறு செய்தார். அதனால்தான் இந்த சம்பவம் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்குவிசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**:–

வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. எனக்கு 7 மணிக்கு நேரடியாக வந்து தகவல் சொன்னார்கள். நான் 7.30 மணியளவில் வீட்டிற்கு சென்று பார்த்தேன். சம்பவம் நடந்த இடத்திற்கும் நான் நின்றுகொண்டிருந்த இடத்திற்கும் சுமார் 500மீ தூரம் இருக்கும். நான் நடந்து வீட்டிற்கு சென்றேன். கேள்விப்பட்டவுடன் நான் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்யவில்லை. எனக்கும் எங்கள் எதிரிகளுக்கும் முன்விரோதம் உள்ளது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. அன்றைய தினம் அ.சா.–2 திருப்பதி என்பவரை வெட்டி கொலை செய்துவிட்டார் என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. எனக்கு தெரியாது. அந்த கொலை சம்மந்தமாக அசா–2 மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அ.சா.–2 கொலை வழக்கில் சம்மந்தப்பட்டதால் அதிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கு சம்பவத்தை சித்தரித்துக்கொண்டு எதிரிகள்மீது பொய் புகார் கொடுத்து, அதில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சென்றுபார்த்தபொழுது அ.சா.–2 திருப்பதியை கொலை செய்துவிட்டு வீட்டில் பதுங்கியிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுமுதல்விசாரணை** – இல்லை.

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.